TAMIL CONGREGATION
ST. PAUL'S CHURCH AHMADI, KUWAIT
தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD

## பரிசுத்த பவுல் ஆலயம் , குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை




**மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் ....**

ஏசாயா 53:4


செய்தி மலர்
ஏப்ரல் 2011

மலர் 11
இதழ் 12



# செயலாளரிடமிருந்து

பிதாவாகிய தேவனாலும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே !

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையோர் அனைவருக்கும் என் அன்பின் நல் வாழ்த்துக்கள்,கடந்த மார்ச் மாதம் முழுவதும் நம்மை கண்மணிபோல காத்துக்கொண்ட தேவனுக்கு நன்றி பலிகளை ஏறெடுப்போம். கடந்த மாத ஆராதனை ஜெபக்கூடுகை சபையின் ஊழியங்கள் அனைத்திலும் தேவனுடைய கரம் நம்மை வழிநடத்திய கிருபைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம், மீண்டுமாக நம்மை ஒரு புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கச் செய்த தேவனை நன்றியுள்ள இருதயத்தோடு ஸ்தோத்தரிப்போம். இந்த மாதம் நடக்க இருக்கும் பரிசுத்த ஆராதனைகளாகிய (Holy worship) குருத்தோலை ஞாயிறு, பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனைகளில் அநேக ஆத்துமாக்கள் கொள்ள தேவனிடம் ஜெபித்துக்கொள்வோம், ஆராதனைகளில் தேவனுடைய அசைவாடுதல் நம்மத்தியிலே காணப்படவும் ஜெபித்துக் கொள்வோம், 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் நம்முடைய சபையின் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்வோம், சபையில் அநேகர் தேவையுள்ளவர்களாக காணப்படுகிறார்கள் அவர்களுக்காக ஜெபித்துக் கொள்வோம்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.
(பிலிப்பியர் 2:5)

இந்த நாட்களில் நாம் இயேசுவின் குண நலன்கள்,பாடு மரணம், இவைகளை பற்றி அதிகமாக தியானித்துக் கொண்டு வருகிறோம். இந்த லெந்துநாட்களில் அநேகர் உபவாசம் இருப்பார்கள், அநேகர் அசைவம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்,மற்றும் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் உதாரணத்திற்கு திருமண வைபோகம் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் என்று தங்களை உட்படுத்திக் கொள்ள மாட்டார்கள், மாத்திரமல்ல தங்களை ஒடுக்கி மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள், அவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றை கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். அதுவென்னவெனில் அவனவன் தனக்கானவைகளையல்ல,பிறருக்கானவைகளையும் நோக்குவானாக! ( பிலிப் 2:4) நாம் நமக்காக நம்முடைய குடும்பத்திற்காக என்றும், நமக்காகவே வாழ்ந்து கொள்வதை மாற்றி பிறரை பற்றியும் நினைத்தருள வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார்.

பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் இயேசுவுக்காக வாழ்வதில் உண்டாகின்ற சந்தோஷத்தையும், இரண்டாம் அதிகாரத்தில் இயேசுவுக்காக சேவை செய்வதில் உண்டாகின்ற மகிழ்ச்சியையும், மூன்றாவது அதிகாரத்தில் கிறிஸ்துவோடு ஜெனிக்கப்பட்டு ஜீவிப்பதில் உண்டாகின்ற மகிழ்ச்சி,நான்காம் அதிகாரத்தில் கிறிஸ்துவிடமிருந்து கிடைக்கின்ற பிரதிபலனால் உண்டாகின்ற மகிழ்ச்சி, அவைகளை அப்போஸ்தலனாகிய பவுல் மகத்தெளிவாக விளக்கி கூறியிருக்கிறார். இவைகளை மீண்டுமாக சிந்திப்பது நமக்கு மிகவும் மகிழ்ச்சியையும பெலனையும் அருள்வதாக காணப்படும். பிலிப்-2:5ஆம் வசனத்தில் இருந்து வாசிக்கும்போது

இயேசு கிறிஸ்துவின் சிந்தை நாம் கண்டு கொள்ள முடியலாம். அதுமாத்திரமல்ல அந்த சிந்தை நம்மில் உருவாக வேண்டும் என்று கண்டு கொள்ளலாம். அநேக வரங்கள் கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கலாம் அவைகளை நாம் நமக்கு மகிமையின் வஸ்திரமாக மாற்றி போர்த்தி கொள்ளாதபடி எல்லாவற்றையும் கர்த்தரின் நாமம் மகிமைக்கென்றே செயல்படத்தவேண்டும்.

யோவான் 14:1ல் இயேசு தன்னை காட்டி கொடுக்க போகிறவன் தன்னோடு கூட இருக்கிறான் என்பதை அறிந்தும் எல்லோரிடமும் அன்பு வைத்தபடியே அவனிடமும் அன்பு வைத்திருந்தார். யோ : 17:11ல் இயேசு தாம் இன்னவிதமாக மரிக்க போகிறார் என்று அறிந்தும் பிதாவை நோக்கி நீர் அவர்களை உம்முடைய நாமத்தினால் காத்துக்கொள்ளும்என்றும், யோவான் 17:15ல் தீமையினின்றும் காத்துக்கொள்ளும் என்றும், யோவான் 17:17ல் பரிசுத்தமாக்கும் என்றும், யோவான் 17:24ல் அவர் (இயேசுவானவர்) எங்கே இருக்கிறாரோ அங்கே அவரோடு நாமும் இருக்க வேண்டுமென்று பிதாவை நோக்கி மன்றாடுகிறதை பார்க்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! நாம் விரும்புகின்ற செல்வம், நாம் விரும்புகின்ற பதவி உயர்வு, நாம் விரும்புகின்ற உலகபிராகாரமான காரியங்கள் அந்தஸ்துகள் நம்மை வந்து சேரும் போது இயேசுவை போல மற்றவர்களும் நம்மை போல உன்னத நிலைக்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறோமா அல்லது கர்த்தர் என் நீதிக்கு தக்கபடி எனக்கு செய்கிறார் நான் மற்றவர்களை பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? எல்லாம் எனக்கு இருக்கிறது நான் இருக்கும் இடத்தை யாரும் நெருங்க முடியாது என்று இருமாப்போடு இருந்து கர்த்தர் நாமம் மகிமைபடுவதை தவிர்க்கிறாயா? இந்த லெந்து நாட்களில் இயேசு கிறிஸ்துவின் சிந்தை உன்னில் உருவாகட்டும். அவர் தேவனுடைய குமாரனாக இருந்தும் அதை கொள்ளையாடினின பொருளாக எண்ணாமல் தம்மைதாமே வெறுமையாக்கினார் (பிலி 2: 6-7) ஆகவேதான் தேவனாகிய கர்த்தர் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு கொடுத்தார், என்று வேதத்திலே வாசிக்கிறோம்.

ஆகவே இந்நாட்களில் அதிகமாக இயேசுவின் சிந்தை என்னவென்பதை பற்றி அதிகமாக சிந்தித்து இந்த சிந்தை நம்மை ஆட்கொள்ள அர்பணிப்போம் அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் உள்ளங்களை கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக் கொள்ளும்.

இந்த மாத சபையின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள் சபை ஊழியங்களில் பங்கு பெறுங்கள்

கர்த்தருடைய சமாதானம் உங்களனைவரோடும் இருப்பதாக ! கர்த்தர் உங்களனைவரையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கர்த்தரின் பணியில்

அன்பு சகோதரன் : ஜஸ்டின் சுந்தரராஜ்

# தேவ செய்தி

## பரலோகத்தை சுதந்தரித்து கொள்வது எப்படி

கிறிஸ்துவுக்குள் அன்பான சுகோதர சகோதரிகளே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். விசேஷமாக இந்த செய்தியின் மூலம் தங்களை சந்திப்பதில் கிறிஸ்துவில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பானவர்களே நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து ஜீவிப்பதின் நோக்கம் எப்படியாவது பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். ஆகவே இந்த பரலோகத்தை சுதந்தரிப்பது எப்படி என்று பார்ப்போம்

இன்றைய கிறிஸ்தவர்கள் தேவனை தேவன் என்று விசுவாசித்தால் மட்டும் போதும் நாம் பரலோகம் சென்று விடலாம் என்று நினைப்பது என்பது ஆகாததொன்று. உதாரணமாக நாம் நினைப்பது போன்று தேவன் விசுவாசிப்பது நல்ல செயல்தான் ஆனால் பிசாசானவனும் தேவன் உண்டு என்று விசுவாசித்து நடுநடுங்குகிறான் என்று வேதத்தில் நாம் காணமுடிகிறது (யாக்கோபு 2:19). இன்னும் சிலர் வாரம் ஒரு முறை ஆலயத்துக்கு சென்று முடிந்த காணிக்கை செலுத்தினால் போதும் பரலோகம் சென்று விடலாம் என்று நினைக்கிறார்கள். மற்றும் ஒரு சிலர் அன்னிய பாஷை பேசினால் போதும் பரலோகம் சென்று விடலாம் என்று நினைக்கிறார்கள். மற்றும் ஒரு சிலர் தீர்க்கதரிசனம் சொன்னால் போதும் என்று நினைக்கிறார்கள். பேய்கள் ஓட்டுவதினாலும் அற்புதங்களை செய்வதினாலும் வாரம் ஒரு முறை ஆராதிப்பதினாலும் நாம் பரலோகம் சென்று விடலாம் என்று நினைக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே தேவன் சர்வவல்லமையுள்ளவர் என்றும், அவரை நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய் என்று யோவான் 11: 40 ல் வாசிக்கிறோம். ஆகையால் தேவனை நாம் விசுாசிக்கும் போது அவருடைய மகிமையான வரங்களை நமக்கு வழி நடத்தி செல்வார் அப்போது நம்மால் அன்னியபாஷை பேச முடியும் நம்மால் தீர்க்கதரிசனம் சொல்லமுடியும், நம்மால் பிசாசுகளை துரத்த முடியும் பல அற்புதங்களையும் பல அடையாளங்களையும் செய்ய முடியும், இப்படியாக எல்லா வரங்களையும் நமக்கு கொடுத்து செயல்படவும் செய்வார். ஆனதல் பரலோக ராஜ்ஜியத்தை மேலே சொன்ன வசனத்தின் மூலம் பெற்று விட முடியாது. காரணம் பரலோக ராஜ்ஜியத்தை குறித்து வேதம் இப்படியாக சொல்கிறது 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'. (மத்தேயு 7:21)

என்று வேதம் சொல்லுகிறது. மாறாக மத்தேயு 7:22 ல் இப்படியாக சொல்கிறது. ‘அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?’ என்பார்கள்.அவர் சித்தம் என்ன என்று அறிந்து அதன்படி நடப்போமானால் நாமும் பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியும். இந்தச் சிரியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. (மத்தேயு 18:14) ஒருவரும் கெட்டுபோவது பிதாவின் சித்தமல்ல என்று வேதம் சொல்லுகிறது. நாம் தேவன் சொன்ன காரியங்களை செய்து கீழ்படிந்து அவருடைய அடிச்சுவடிகளை பின்பற்றி தன்னுடைய சிலுவையை தாமே சுமந்து நமக்கு கொடுக்கப்பட்ட ஓட்டத்தை திரம்பட ஓடி வெற்றி இலக்கை அடையும் போதும் ஆவியில் எளிமையுள்ளவர்களாய் நாம் இருந்து பாக்கியவானாய் பாக்கியவதியாய் நாம் கருதப்படுவோம் தேவனால் கிரீடம் நமக்கு சூட்டப்படும்.

3.ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது.4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள்.5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்.7. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.9. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.10. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 5:3-10)

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 5:20)

பரலோக ராஜ்ஜியத்தில் எப்படி இடம் பிடிப்பது அதை சுதந்திரித்து கொள்வது எப்படி என்று வேத வசனங்களின் மூலமாக நாம் தெரிந்து கொண்டோம்.

கிறிதுவுக்குள் அன்பானவர்களே ஆண்டவருடைய சித்தம் என்ன என்று மேலே சொன்ன காரியங்களை கருத்தில் கொண்டு பரலோக ராஜ்ஜியத்தை சுதந்தரித்து கொள்வோம்! முயற்சி செய்வோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

D. ஆசீர்வாதம்

# KIDS CORNER

## MONTH OF April 2011

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | | | | | 12 | | | | | |
| 13 | | | | | 14 | | | | | |
| 15 | | | | | | | 16 | | | |
| 17 | | | | 18 | 19 | 20 | | | | |
| | | | | 21 | | | | | | |
| 22 | 23 | 24 | 25 | | | | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | | 31 | | | |
| 30 | | | | 33 | 34 | | 35 | | | |
| 36 | | | | | | | 37 | | | |
| 38 | | | | | | | 39 | | | |

### Across

**1.Familiar father 5. Gorges (Luke 16:26) 11. Styptic or astringent 12. solid cylinder 13. cut back 14. faithless (Jn 10:35) 15. End of 22- across(Mt 6:13). 16. Naturainess 17. Communion service (1 Cor 11:33) 21. leafy drink. 22 Model invocation (Mt 6:9 -13) 30. Declare positivly 31. Author Walterde la 32. Conductive elements 35. Gods -----(churchyyard) 36. Original 37. Cast off (Is 58:8) 38. Constant. 39. Ideals, for short**

### DOWN

**1 Re. Roman Church head 2. Remember the ----- 3. Cleaner(Phil 1:15) 4. Rectify 5. Computer's Brain 6. Hebrew half gallon 7. Walk start 2 wds (1 Sm 17:39) 8. Length of leather 9. Computer pointing device 10. Contempt expression 18. Avenues; abbr19.Ninth mo. 20. Egypt-Syria alliance 22. Light providers (Ex 25;6) 23. Not concealed 24. Knot Again 25. Play script 26 collect(1 Chr 29:25)Pleasuer boat 28. Strayed 29. Cane strips (Ex2:3)33. Boy 34. Cunning**

## Month of March 2011
## Answer

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| C | A | M | P | | A | B | C | D |
| A | R | I | A | | S | O | A | R |
| S | A | N | S | | S | U | R | E |
| A | B | S | T | A | I | N | E | D |
| | | T | O | A | S | T | | |
| N | A | R | R | A | T | I | O | N |
| A | R | E | A | | E | F | M | A |
| M | A | L | T | | R | U | S | S |
| E | L | S | E | | S | L | I | T |

# ஊழியர்கள் பகுதி

பிரியமான சகோதர சகோதரிகளே நம்மில் சிலர் ஊழியங்களை முன்னின்று செயல்படுத்துகிறவர்களாக இருக்கிறோம். நமக்கு உபயோகப்படும் வகையில் ஊழியர்கள் பகுதி என்னும் இந்த பகுதியை தொடங்க ஆவியானவர் என்னுள்ளத்தில் ஏவியபடியால் இந்த இதழில் இருந்து தொடங்குகிறேன். வரும் இதழ்களில் தங்களுக்கு கர்த்தர் உணர்த்துகிற சபையின் வளர்ச்சிக்கு தேவையான காரியங்களை ஊழியர் பகுதியில் அறிவுரையாக அல்ல ஆலோசனையாக மற்றவர்களுக்கு பிரயோஜனப்படும் வகையில், எந்த ஒரு ஊழியர்களையும் மனதில் கொள்ளாமல், எழுத முன்வரும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

## தேவனுடைய மனுஷன்

தேவனுடைய மனுஷன் எப்படிபட்டவனாய் இருக்கவேண்டும் ,என்பதை குறித்து 7 காரியங்களை கீழ்வரும் பகுதிகளில் கவனிப்போம்.

1. **பரிசுத்த ஆவி** : 2 ராஜாக்கள் 4:9 (சூனேம் ஊரானாகிய கனம் பொருந்திய ஸ்திரி) தன் புருஷனை நோக்கி 'இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்'. என்றாள் எலிசாவை குறித்து தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று விளம்புகிறார்.

சூனேமியாள் ஒரு கனம் பொருந்திய ஸ்திரி என்று வேதம் சொல்லுகிறது. கனம் பொருந்திய ஸ்திரியின் விட்டிற்கு செல்லும் தேவ மனுஷனாகிய எலிசா ஒரு கனம் பொருந்திய மனுஷனாக அல்ல ஒரு பரிசுத்தவனாக தன்னை வெளிபடுத்துகிறார்.

ஓ தேவ மனுஷர்களே உங்களிடத்தில் தேவன் திட்டவட்டமாய் எதிர்பார்கிற ஒரு காரியம் பரிசுத்தம் நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று நமது ஆண்டவர் சொல்லுகிறார்.

எபேசியர் 5:3ல் மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது, பேர்முதலாய் என்பதை கவனியுங்கள்.

தப்பு தவறுகள் ஒரு நிமிஷத்தில் செய்துவிடலாம். அதனால் உண்டாகும் வடு (Scar) நம் மரணம் வரைக்கும் வெகு பாடுபடுத்திவிடும் அது வடுஉள்ளவர்களை மட்டுமல்ல, அதை கேள்விபட்டவர்களுக்கும் மிகுந்த வேதனையை உண்டாக்கும்.

2. **தேவனுடைய மனுஷன்** : பெரியவர் - தப்பமால் நடக்கும்:

1 சாமுவேல் (9:6). அதற்கு அவன்: இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார் அவர் பெரியவர் அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும். நாமெல்லாம் யார் தேவனுக்கு முன்பாக நிற்கிற ஊழியக்காரர்களாய் இருப்பதால் மற்றவர்களுக்கு முன்பாக நம்மை தேவன் பெரியவர்களாய் நிறுத்தி வைக்கிறார். (It is a distinction)

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக தேவ தூதன் இயேசுவை குறித்து 'அவர் பெரியவராய் இருப்பார்' என்று கூறினான். இயேசு பெரியவராய் இருந்தும் தனக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. என் சமாதானத்தை உனக்கு தருகிறேன் என் கிருபை உனக்கு போதும் என் பெலனை உனக்கு தருகிறேன் என் கூட இருக்கும்படி ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண போகிறேன். (இன்னும் தொடரும்)

(நன்றி இயேசு ஜீவிக்கிறார் ஊழியம்)

# 2011 மார்ச் மாத வேத வினாவிற்கான பதில்கள். 

1. தாவீது 1 சாமு 16:12
2. அபிகாயில் 1 சாமு 25:23
3. அன்னால் 1 சாமு 1:110-16
4. சவுலிடம் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ 1 சாமு 28:12
5. தாவீது 1 சாமு 16:14-18.23
6. சவுல் ராஜ்யபாரம் 1 சாமு 9: 1-27
7. தாவீது 1 சாமு 23:22
8. தாவீது 1 சாமு 20:3
9. சவுல் 1 சாமு 31: 1-6
10. 1 சாமு 16:12
11. ஏலி 1 சாமு 4:8
12. சவுலும் குமாரரும் 1 சாமு 31:1-13
13. தாவீது 1 சாமு 18:27
14. ஆகாக் 1 சாமு 15:32
15. இக்கபோத் 1 சாமு 4:11-21
16. தாவீது 1 சாமு 17:50-51
17. கோலியாத் 1 சாமு 17:43
18. தாவீது 1 சாமு 24:14

## 2011 மார்ச் மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. லதா கிறிஸ்டோபர் சகோதரி. மெர்லின் அஜீத்
சகோதரி. சுகந்தி தம்புகுமார் சகோதரி. பிங்கி சாம்
சகோதரி. எஸ்தர் விசு சகோதரி. ஹேனா எசேக்கியல்
சகோதரி. மரகதம் ஸ்டீ.:.பன் சகோதரி. அனுஷுயா டேவிட்ஸன்
சகோதரி. குமுதினி வில்ஸன் சகோதரி. பத்மா ராயன்
சகோதரி. பத்மினி சகோதரி. மெர்சிலின்தயா இயேசு ரெத்தினம்
சகோதரி. அனுபா டேனியல் சகோதரி. ஜரின் பிரீட்டா சிங்
சகோதரர். பாபு சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். இயேசு நாயகம் சகோதரர். ஆரோக்கியராஜ்

# 2011 ஏப்ரல் மாத வேத வினா பகுதி

1. ஊள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் ஒரு பழுதில்லாமல் சவுந்தரியமுள்ளவனாயிருந்தவன் யார்?

2. வெகு சவுந்தரியவதியாயிருந்த ஒரு ஸ்திரி யார்?

3. இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தை கவர்ந்து கொண்ட மனுஷன் யார்?

4. ராஜாவிடம் என் வேலைக்காரன் என்னை மோசம் போக்கினான் என்ற மனுஷன் யார்?

5. அம்மோனின் சிநேகிதன் அவன் மகா தந்திரவாதி அவன் யார்?

6. மூன்று வல்லயங்களினால் நெஞ்சில் குத்தப்பட்டு பத்துபேர் சூழ்ந்து அடித்து கொல்லப்பட்டவன் யார்?

7. பழைய ஏற்பாட்டில் நான்று கொண்டு செத்தவன் யார்?

8. தன் ஊரிலே மரித்து, தன் தாய்தகப்பன் மார் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட விரும்பினவன் யார்?

9. அழுது உபவாசித்து ஜெபித்தான் தந்தை குழந்தை மரித்த உடனே குளித்து புசித்தான் விந்தை! இவன் யார்?

10. எகிப்தியன் கையில் இருந்த ஈட்டியை பறித்து அவன் ஈட்டியினாலே அவனை கொன்று போட்டவன் யார்?

11. நான் ஒரு நாய்தலையா என்றவன் யார்?

12. மூன்று சிங்கங்களை கொன்ற பராக்கிரமசாலி யார்?

13. நீ எவ்விடத்தான் என்று கேட்டது யார்?

14 செய்கையில் வல்லவன் யார்?

15. அப்சலோமின் சகோதரியின் பெயர் என்ன?

**விடைகளை வருகின்ற 22-4-2011 க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை II சாமுவேல் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்**

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாமஸ் அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஸ்டீ:பன் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் (சகோ. ஆரோக்கியதாஸ் 99870126) (சகோ.தாமஸ் 66810423) (சகோ. ஸ்டீ:பன 65868048)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக". ரோ 16:20

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. பிரீத்திகா பிரேம்குமார்
செல்வி. லிடியா வில்கின்ஸ்
செல்வி. அம்ரீஷ் விஜய்தா மனோகர்
செல்வி. வின்ஸி டேவிட் ஜெயகுமார்
செல்வி. குமாரி ராஜன்
செல்வி. பிரைஸ் புஃளோரா பெர்லின்
செல்வி ரினி ரேச்சல் வில்ஸன்
செல்வி. சாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
செல்வி. சோமா மேரி வேளாங்கன்னி
செல்வி. எபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
செல்வி. லாவண்யா ஐசக்துரை

செல்வன். மோசே சத்தியநாதன்
செல்வன். விமல் டேவிட் ஜெயகுமார்
செல்வன். ஜெரால்ட் ஜஸ்டின்

சகோதரி. சோபியா ஜோசப் பாபுராஜ்
சகோதரி. கலாராணி ஜெயகுமார்
சகோதரி. வசந்தா செல்வராஜ்
சகோதரி. விஜயகுமாரி சுந்தராஜ்
சகோதரி. ராஜ மோகனா சைமன்
சகோதரி. பூங்கோதை ஏஞ்சல்

சகோதரர்.அல்போன்ஸ் விஸ்வநாதன்
சகோதரர்.ஜெபராஜ்
சகோதரர்.ஆல்வின் பென்னி
சகோதரர்.ரோமன்ஸ் ஜார்ஜ்
சகோதரர்.சுகுமாரன்
சகோதரர்.செல்வராஜ்
சகோதரர்.M ஜார்ஜ்
சகோதரர்.ஜோசப் பாபுராஜ்
சகோதரர்.பிரதீப்குமார்
சகோதரர். பால்ஜெகநாதன்
சகோதரர்.ஜான் பீட்டர்
சகோதரர்.ஜோதி பிரபாகர்
சகோதரர்.ரவி ஜான் பீட்டர்
சகோதரர்.டென்சிங்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" .ஆதி 12:2

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி-திரு. ரிச்சர்ட் சாலமோன்

திருமதி-திரு. அல்போன்ஸ் விஸ்வநாதன்

திருமதி-திரு. ஜானி செல்வம்

திருமதி-திரு. அருள் சாமுவேல்

திருமதி-திரு. ஸ்டீஃபன்

திருமதி-திரு. அருண் இம்மானுவேல்

திருமதி-திரு. பால் டேனியல்

திருமதி-திரு. டென்சிங்

# 2011 ஏப்ரல் மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 1-04-2011 | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. ஸ்டாலின் |
| 8-04-2011 | சகோ. ஜெயசேகர் | சகோ. பிரேம்குமார் |
| 15-04-2011 | உபவாச ஆராதனை | |
| 22-04-2011 | புனித வெள்ளி ஆராதனை (3-40 to 6-20) | |
| 29-04-2011 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. ஸ்டீஃபன் |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 3-04-2011 | சகோ. விசு |
| 10-04-2011 | சகோ. தாமஸ் |
| 17-04-2011 | குருத்தோலை ஞாயிறு (5-00 to 6-20) |
| 24-04-2011 | உயிர்த்தெழுந்த ஞாயிறு (3-45 to 5-15) |

சகோதரிகள் ஐக்கிய கூடுகை - நாள் 6-4-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு

இடம் : சகோதரி. டெய்ஸி எபிநேசர் அவர்கள் இல்லம் (பாஹூஹீல்)

பெரிய வியாழன் ஆராதனை 21-04-2011 ஆம் தேதி

மாலை 4-15 முதல் 6-25 வரை நடைபெறும்

இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி

முழு இரவு ஜெபம் -14-4-2011

(இடம்) பரிசுத்த பவுல் ஆலயம், இரவு 11-00 மணி முதல்

அதிகாலை 3 -00 மணி வரை

வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 29-4-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு

இடம் : பின்னர் அறிவிக்கப்படும்

# குடும்ப பகுதி

## இயேசுவை மையமாகக் கொண்ட குடும்பம்

**மனைவி தன் புருஷனுடைய உலகத்திற்குள் அமைந்து வாழ வேண்டும். 'உன் ஆசை உன் புருஷனை பற்றியிருக்கும், அவன்உன்னை ஆண்டுகொள்வான்' என்று ஆதியாகமம் 3:16ல் வாசிக்கிறோம். கர்த்தர் சொன்ன வார்த்தையை இன்னும் மாற்றவில்லை. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும், மனைவிகளே உங்கள் புருஷருக்கு கீழ்படிந்திருங்கள் என்றே போதிக்கிறது. மனைவிகளே கர்த்தருக்கு கீழ்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படியுங்கள். கிறிஸ்து சபைக்கு தலைவராய் இருக்கிறது போல, புருஷனும் மனைவிக்கு தலைவனாய் இருக்கிறான். அவரே சரீரத்திற்கு இரட்சகராய் இருக்கிறார் ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குள் கீழ்படிகிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும் (எபேசியர்** 5:22-24)**....மனைவியும் புருஷரிடத்தில் பயபக்தியாயிருக்க கடவள் (எபே** 5:3**) அந்தபடி மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படிந்திருங்கள் (**1 **பேதுரு** 3:1**) மனைவிகளே .....உங்கள் புருஷருக்கு கீழ்படிந்திருங்கள் (கொலேசியர் 3:1**

**மேலே உள்ள வசனங்களில் மனைவிக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளாக ஆறு வார்த்தைகள் வருகின்றன.** 1. **ஒப்புவித்து கணவனுக்கு இசைந்து** 2. **தங்களை புருஷனுக்கு உட்படுத்தி** 3 **அடிமையாக கீழ்படிந்து** 4. **கீழ்படிதல்** 5 **பயபக்தி** 6. **அன்பு.**

**மனைவியாக உங்களுக்கு வேதம் சொல்லுகிறது என்னவென்றால் இவைகளை நீங்கள் செய்யாவிட்டால் உங்கள் மூலம் தேவனுடைய நாமம் தூஷிக்கபடுகிறது. உங்கள் ஜெபங்களுக்கு பதில் வராது (தீத்து** 2:4,5**) (1 பேதுரு** 3:5,6,7**). இவைகள் எளிதானவைகள் அல்லவென்று நான் நன்றாக அறிந்திருக்கிறேன், ஏனெனில் புருஷர்கள் நல்ல கிறிஸ்தவர்களாக,நல்வாழ்க்கை செய்கிறவர்களாகவும் இராவிடில், நாம் கீழ்படிந்திருப்பது சிரமம். ஆனால் நீங்கள் புருஷனுக்கு கீழ்படிய வேண்டியது உங்களுடைய நிச்சயமான கடமையென்று வேதம் திட்டமும் தெளிவாய் போதிக்கிறது.**

**வேத புத்தகத்திலில்லாத சில நல்ல ஆலோசனைகளையும் மனைவிகளாகிய உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். உங்கள் புருஷர்கள் மாலையில் வீடு திரும்புகிறார். நீங்கள் பகல் முழுவதும் வேலை செய்து களைத்து போனவர்களாக இருந்தாலும் வாசலில் போய் அவரை அன்போடு வரவேற்று பாருங்கள். இது வரையிலும் நீங்கள் செய்யாமல் இப்பொழுது நீங்கள் செய்யும் பொழுது, அது அவருக்கு ஒரு அதிர்ச்சியாக கூட இருக்கலாம். ஆனாலும் பரவாயில்லை. சில சகோதரிகள் சமையறையில் இருந்த வண்ணமே உள்ள வந்து மறக்காம கதவை சாத்துங்கள் என்று சத்தம் போடுவார்கள். மாறாக ஏன் வரும் நேரத்தில் வாசலில் வந்து வரவேற்க கூடாது? நீங்களும் வீட்டு வேளைகளிலோ அல்லது அலுவலக வேலையிலோ களைத்திருக்கலாம். ஆனாலும் நீங்கள் வந்து உபசரிக்கும்**

போதுஅவர் உள்ளம் மகிழும் அல்லாமல் உங்கள் மேல் ஒரு இரக்கம் வர வாய்ப்பிருக்கிறது அல்லவா? சகோதரிகளே எந்த விலைகொடுத்தாவது கணவனுடைய அன்பை விட்டு விலகாமல் உங்களை காத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாலிபத்தின் எளிமையையும், மென்மையையும், இழந்து போக வேண்டாம். அநேக சகோதரிகள் எளிமை என்ற அர்த்தத்தில் தங்களை மிகவும் சிறுமைபடுத்தி காட்டுகின்றனர். தங்களது கணவர்களுக்கு முன்பாக அவர்களுக்கு பிடித்தது போல நடந்து கொள்ளுங்கள். இன்னும் ஒரு சில சகோதரிகள் தங்கள் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள தவறிவிடுகிறார்கள் இது பெரும்பாலும் சாத்தியமில்லைதான் இருந்தாலும் கூடிய அளவு முயற்சிசெய்வோமே!

இது போன்ற முரன்பாடான செயல்களினால் சில கணவர்கள் தங்கள் வீட்டை இருதயத்தால் வெறுக்கிறார்கள். தங்கள் மனைவி அழகு ராணியாக வலம் வர வேண்டும் என்று எந்த கணவரும் விரும்பமாட்டார்கள். ஆனால் தனக்கு அழகு ராணியாக காட்சியளிக்க வேண்டும் என்று நினைப்பதில் எந்த தவறும் இல்லை அல்லவா? அதே சமயத்தில் உங்கள் சாதாரண முகத்தில் அன்பும், அமைதலும், ஆவியின் அழகும் வெளிப்படுமானால் எந்த பெண்ணும் தன் புருஷனுக்கு அழகுள்ளவர்களாகவே காணப்படுவார்கள்.

குறிப்பாக சில சகோதரிகளுக்கு உலக நடப்பு என்ன என்பதே தெரியாது. உங்களது கணவர்களை போல நீங்களும் சற்று உலகஞானத்திலும் வளரவேண்டும். உலகத்தின் நடப்பு என்ன என்பதை அறிந்து வைத்துக் கொள்ளவேண்டும். ஒன்றும் தெரியாத தருணத்தில் கணவர்மார்கள் சிலர் மனைவிகளை ஏமாற்றி விடுவதை பார்த்து இருக்கிறேன். கணவன் அல்ல பிள்ளைகளே ஏமாற்றி விடுவதை பார்த்திருக்கிறேன். கணவனுக்கும் மனைவிக்கும் பேச விஷயமா இல்லை, ஊர்கதையை தவிர்த்து உலக சம்பாஷனைகளில் இறங்குங்கள் வேதத்தை ஆராய்ந்து பாருங்கள். முக்கியமான ஒன்று நம்முடைய பிள்ளைகள் மத்தியில் நாம் வம்பு பேசுவதை தவிர்க்க வேண்டும். அவர்களும் வம்பு செய்கிறவர்களாக மாறிவிடுவார்கள். எனக்கு தெரிந்து பல பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்பாக ஊழியக்காரர்களை, ஆசிரியர்களை குறைவாக பேசுவதை கேட்டிருக்கிறேன். அப்படிபட்ட பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை படிப்பிலும், ஆவிக்குறிய வாழ்க்கையிலும் முன்னேரமுடியாமல் செய்துவிடுகிறார்கள். அப்படிபட்ட முறுமுறுப்பகளே நமது விட்டை நாசம் செய்துவிடும்

மதியற்ற ஸ்திரி வாயாடியும் ஒன்று மறியாத நிர்மூடமுமாயீக்கிறாள் (நீதி 9:13) மதிடோய் நடக்கிற அழகுள்ள ஸ்திரி, பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்கு சமானம் ( நீதி 11:22) சண்டையோடு கூடிய வீடு நிறைந்து கொழுமையான பதார்த்தங்களைப் பார்க்கிலும் வெறும் துணிக்கையே நலம் (நீதி 17:1)

(இன்னும் தொடரும்)

# நீங்களும் உங்கள் Teen Age மகனும்

பிரியமான சகோதர சகோதரிகளே உங்களுடைய Teen Age மகனுடன் நீங்கள் எப்படி சில நேரங்களில் முடிவு எடுப்பீர்கள் என்பதை குறித்து சின்ன பரீட்சை

1. தீர்மானம் எடுக்கும் போது A. என் மகனை அவனாக தீர்மானங்களை எடுக்க உற்சாகபடுத்துவேன் B. ஒரு சில காரியங்களிலே நானே அவனுக்காக தீர்மானிப்பேன். C. நான் என்ன சொல்கிறேனோ அதைதான் செய்ய வேண்டும்.

2. நண்பர்களோடு. A .மகனின் நண்பர்கள் அவனோடு வந்தால் எனக்கு அறவே பிடிக்காது. B. வருவார்கள் போவார்கள். C. அவனுடைய நண்பர்களை உற்சாகமாக உபசரிப்பேன்

3. பண விஷயத்தில். A .அவன் பணம் கேட்கும் போதெல்லாம் கொடுப்பேன். B. பணம் கொடுக்கும் பொழுது செலவைப்பற்றி தெரிந்து கொள்வேன். C. எளிமையாக வாழ உற்சாக படுத்துவேன்.

4. எதிர் பாலரோடு A .எப்படி பழகவேண்டும் என்று கற்று கொடுத்திருக்கிறேன் . B. இதெல்லாம் அவனுக்கு தெரியாதா என்ன? C. Girl friend என்பது இன்றைய நாகரீகம்.

5. அவன் பேசும் போது. A .உற்சாகமாக கேட்பேன். B. எனக்கு அதற்கு நேரமே இல்லை. C. எப்போதாவது அப்படி கேட்ப்பேன்.

6. அவனோடு நான், A. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அவனுடன் பேசுகிறேன். B. வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவனுடன் பேசுகிறேன். C. இதை பற்றி நான் சிந்திப்பதே இல்லை.

7. குறை காணப்படும் போது, A. அவனுடைய குறைகளை யெல்லாம் கோபம் வரும்பொதெல்லாம் சொல்லி காண்பிப்பேன். B. குறைகளை மேற்கொள்ள அவனுக்கு உதவுவேன். C. குறைகளை பெரிது படுத்தாமல் நல்ல காரியங்களை மெச்சுவேன்.

8. கோபம் வரும் போது. A. கோபத்தில் அவன் மேல் சாபத்தையிடுகிறேன் . B. கோபத்தில் சத்தம் போட்டு பின்பு அமைதியாகிவிடுவேன். C. கோபத்தில் அவனிடம் நிதானமாக நடக்கிறேன்.

9. ஜெபிப்பதில். A. எங்கள் பிள்ளைகளுக்காக தினமும் ஜெபிக்கிறோம். B. அவன் உபத்திரவம் கொடுக்கும் போது அவனுக்காக ஜெபிக்கிறோம். C. பொதுவாகத்தான் ஜெபிப்போம்.

10. ஆவிக்குறிய வாழ்க்கையில் வளர. A. கவனமாக இருக்கிறோம் . B. Sunday class க்கு போய் விடுவான். C. Sorry இதை பற்றி மறந்தே விட்டோம்

உங்கள் யூகம் சரியா என்பதை பார்க்க அடுத்தமாதம் வரை காத்திருக்கவேண்டும்

# வாலிபர் பகுதி

**கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் இந்த செய்தி மலர் மூலம் மீண்டும் உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.**

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

## கர்த்தர் கூட இருக்கிறார்

**ஒரு சமயம் நான் இந்தியாவின் வட மாநிலங்களில் இயேசுவுக்காக தங்களை ஒப்பு கொடுத்து ஊழியம்செய்யும் மிஷனெரிகளை சந்திக்க நேர்ந்தது அவர்கள்** B s hÁº ö\´u J ¸ AØ¦uzøu TÔÚõºPÒ. J ¸ ©ø»¨ £Sv ° À ö£›¯ v ¸ ÂÇõ JßÖ |øhö£ØÓx. £» QµõÚ© [P Î ¾ ª ¸ ¢x ©UPÒ Á¢x T i Úõ ºPÒ. CÁºP ÐUS _Â÷\ åzøu AÔÂUP Cµs k ª åöÚ›PÒ Sk®£©õP ö\ ßÓõºPÒ. Tmh® ö£›uõP C ¸ ¢u£i ° ÚõÀ, A¢u ª åöÚ›PÒ u[PÒ ©øÚÂ©õºPø Í J ¸ £Sv ° À {ßÖ F È¯® ö\´¯ øÁzx Âmk, CÁºPÒ ©ØöÓõ ¸ £SvUSa ö\ßÓõºPÒ.

C¢u Cµs k \÷Põu›PÐ®, øP¨ ¤µvPø ÍU öPõkzx, _Â÷\ åzøu AÔÂzxU öPõ s i ¸ ¢uõºPÒ.v j öµßÖ Cµs k ÷£º x¨£õUQ÷¯õk Á¢x CÁºPø Í ©hUQÚõºPÒ. G[P÷ Íõk ÁµõÂmhõÀ E[Pø Í _mkU öPõßÖ Â k÷Áõ® GßÖ £¯•Özv, Põmk¨ £SvUSÒ AøÇzxa ö\ßÓõºPÒ. CöuÀ»õ® C[S |hUPUT i¯Põ›¯[PÒ. BP÷Á ©ØÓÁºPÒ £¯¢x Jx[Q¨ ÷£õÚõºPÒ. \÷PõuµºPÒ Tmhzvß CßöÚõ ¸ £UPzvÀ C ¸ ¢u£i ° ÚõÀ, AÁºPø Í EuÂUSU T¨¤h • i¯ÂÀø».

C¢uCµs k \÷Põu›PÐUS®GßÚö\´Áöuß÷Óöu›¯ÂÀø». C¢u ö£õÀ»õu ©Ûu ºPÐ øh¯ øP°¼¸¢x ¯õº u[Pø Í z u¨¦Â ¨£õºPÒ? GßÖ £¯¢x P» [QÚõºPÒ. B s hÁøµz uÂµ ¯õ ¸® u[Pø Í z u¨¦ÂUP •i¯õöuß£øu AÔ¢x,Pºzuøµ÷|õUQU T¨¤mhõºPÒ. CuØSÒ¯õ ¸ ª À»õu Põmk¨ £SvUSÒ Á¢x Âmhõ ºPÒ.v j öµßÖ A¢uU PõmkUSÒ Î ¸ ¢x P®¥µ©õÚ, E¯µ©õÚ J ¸ ©Ûuß Ph¢x Á¢uõß. CÁºPÒ A ¸ QÀ Á¢x, CÁºPø Í x¨£õUQ¯õÀ £¯•ÖzvU öPõ s i ¸ ¢u C ¸ Áøµ ² ® £õºzx, CÁºPø Í Âmk Ki¨ ÷£õ[PÒ GßÖ AvPõµz÷uõk Pmhø Í ° mhõß. Eh÷Ú AÁºPÒ C ¸ Á ¸® £¯¢x |k[Q CÁºPø Í Âmk PõmkUSÒ Ki¨ ÷£õÚõºPÒ. Auß ¤ÓS A¢u ©Ûuß CÁºPø Í¨ £õºzx Aß÷£õk ÷£] Úõß. £¯¨£hõwºPÒ,Gß ¤ß÷Ú Áõ ¸ [PÒ GßÖ ö\õÀ¼ • ßÚõÀ |h¢uõß; CÁºPÒ AÁß ¤ß÷Ú |h¢uõºPÒ.

CÁß ¯õº?CÁß v j öµßÖ C¢uPõmkUSÒG¨£i Á¢uõß?CÁ Ý øh¯ øP°À J ¸ B ²u•® CÀø»; B ÚõÀ CÁß ö\õßÚÄhß AÁºPÒ Hß £¯¢x Ki Úõ ºPÒ? JßÖ® Â Í [PÂÀø» GßÖ G s o ÚÁºP ÍõP AÁ÷Úõk

÷£\÷Á £¯¢x Aø©v¯õP |h¢x Á¢uõºPÒ. F ¸USÒ v¸ÂÇõ |øhö£Ö® ChzvØS Á¢ux®, C¸Á¸®Kiaö\ßÖu[PÒPn Áº©õºPø ÍU Psk ¤izx, |h¢u GÀ»õÁØøÓ²® ö\õÀ¼ A¢u ©Ûuø Ú¨ £õºUP AøÇzx Á¢uõºPÒ. AÁºPÒ Á¢u÷£õx A¢u ©Ûuß A[÷P CÀø».

A¨ö£õÊxuõß, Pºzuº u®•øh¯ yuøÚ AÝ¨¤, u[Pø Í C¢u CUPmi¼¸¢xu¨¦Âzuõº Gß£øu AÔ¢x Pºzuøµz xvzuõºPÒ. AUQÛa `ø Í °Àuß uõ\ºP ÍõQ¯ \õzµõU, ÷©åõU, B÷£z÷|÷Põø Áu¨¦ÂUS®£i, ÷¯÷PõÁõ å®©õ ÁõP CÓ[Q Á¢u B s hÁº (uõÛ. 3: 23&26);

][PU öP¤ °÷» ÷£õh¨£mh uõÛ÷¯ø»z u¨¦Â¨£uØPõP, uß Ýøh¯ yuøÚ AÝ¨¤ ][P[PÎ ß Áõø¯UPmi¨ ÷£õmh B s hÁº (uõÛ. 6:22); CßÖ, ÷¯÷PõÁõ å®©õ ÁõP uß ¤Òø ÍPø Íz u¨¦ÂUP Th C¸UQÓõº. AÀ÷»¿¯õ! E[Pø Í ²®u¨¦Â¨£õº! £¯¨£hõwºPÒ, G¢u CUPmi¼¸¢x® E[Pø Íz u¨¦Â¨£õº. G¢u B£zx E[Pø Ía`Ì¢v¸¢uõ¾®, P» [PõwºPÒ! ÷¯÷PõÁõ å®©õ E[Pø Íz u¨¦Â¨£õº. } AÁºPÐUS¨£¯¨£h÷Á s hõ®; EßøÚUPõUS®£iUS |õß EßÝh÷Ú C¸UQ÷Óß GßÖ Pºzuº ö\õÀQÓõº (G÷µª¯õ 1:8). ÷¯÷PõÁõ å®©õ ÁõP Pºzuº |®÷©õk Th C¸¨£x |®ø© Cµm]¨£uØPõP, |®ø©z u¨¦Â¨£uØPõP ©mk©À», |®ø© Pøh] Áøµ PõzxU öPõÒÐ®£i¯õPÄ® AÁº |®÷©õi¸UQÓõº.

wø©PÒ {øÓ¢u E»PzvÀ |õ® ÁõÌQ÷Óõ®. ©ÛuºP ÍõÀ Á¸® w[SPÒ, A_zu B ÂP ÍõÀ Á¸® w[SPÒ,...C¨£i £»Âu wø©PÒ |®ø©a `Ì¢x Á¢uõ¾®, GxÄ® |®ø© ÷\u¨£kzuõu£i |®ø©¨ £õxPõUP Pºzuº |®÷©õi¸UQÓõº. |®Ps qUSzöu›QÓ,Ps qUSzöu›¯õu B£zxPÒTh |®ø©a`Ì¢x Á¸®÷£õx ÷¯÷PõÁõ å®©õ ÁõP Pºzuº |®÷©õi¸¢x, |õ® ÷\u©øh¯õu£i |®ø©¨ £õxPõUQÓõº.

**பிரசித்தி பெற்ற ஊழியக்காரர் ஒருவர் சுய சரிதையில் இருந்து நான் படித்ததை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். அவர் எழுதிய சில வரிகள்**

|õß FÈ¯zvØS Aº¨£ozv¸¢u Bµ®£ |õmPÎÀ, J¸ Qµõ©zvÀ u[Q FÈ¯® ö\´x öPõs i¸¢÷uõ®. J¸ ÃmiÀ SÊÁõP u[Q°¸¢x FÈ¯® ö\´÷uõ®. J¸ |õÒ CµÂÀ öá¤zx Âmk £kUPa ö\ß÷Óõ®. |õß £kzu ]» {ªh÷|µzvÀ ¯õ÷µõ Gß Põø»z umi GßøÚ GÊ¨¦Áøu¨ ÷£õÀ E nº¢÷uß. Eh÷Ú GÊ¢x Â ÍUøP¨ ÷£õmh÷£õx, GÀ÷»õ¸® y[QU öPõs i¸¢uõºPÒ. ¯õº GßøÚz umi GÊ¨¤Úx? GßÖ ÷¯õ]zxU öPõs÷h, ©Ö£i²® Â ÍUøP Aøn zx Âmk¨ £kzx Âm÷hß. ]» {ªh[PÎÀ, ©Ö£i²® ¯õ÷µõ Gß Põø»z umi GÊ¨¦Áøu E nº¢÷uß. ©Ö£i²® GÊ¢x Â ÍUøP¨ ÷£õm÷hß. A¨ö£õÊxuõß |õß PÁÛz÷uß;

(அடுத்த இதழில் தொடரும்...)

# சகோதரிகள் பகுதி

## PRAISE THE LORD

### கர்த்தருக்கு பிரியமாய் இருப்பது எப்படி

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த செய்தி மலர் மூலம் தங்களனைவரையும் காணும்படியும், கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளும் படி இந்த வாய்ப்பை உண்டாக்கி தந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தி, தேவனுக்கு பிரியமாய் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற தலைப்பில் தங்களுடன் கர்த்தருடைய வசனத்தை ஆதாரமாக கொண்டு எழுதுகிறேன் கர்த்தர் கிரியை செய்வாராக!**

**என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்.. (யோவான் 8:29) இந்தப் பூமிக்குரிய வாழ்க்கையின் நோக்கத்தை இயேசு அறிந்திருக்கிறார். அது பிதாவை பிரியபடுத்த வேண்டும் என்பதுதான்.**

**என் பிரியமே என்று கர்த்தர் நம்மை பார்த்து அழைக்கும்படி (உன் 4:7) நான் அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழவேண்டும். அதை போல ஆண்டவர் பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோ 1:2) என்று சொல்லுகிறார்.**

**இன்றைக்கு நாம் அநேகரை திருப்திபடுத்தலாம். ஆனால் அவர்கள் பிரியம் நமக்கு கிடைக்கும் என்று சொல்லி விட முடியாது. நாம் பிதாவுக்கு பிரியமானவைகளை செய்யும் பொழுது அவருடைய பிரசன்னம், சமூகம், வல்லமை, கிருபைகள் நம்மை சூழ்ந்து கொள்ளலாம்.**

**கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று சோதித்து பாருங்கள். (எபே 5:10) நான் பேசுகிற ஒவ்வொரு பேச்சும் செய்கிற ஒவ்வொரு செயலும் கர்த்தருக்கு பிரியமா? என்று அறிந்து செயல்பட வேண்டும். தேவனுடைய மனுஷன் மோசே ஜெபிக்கும் பொழுது, எங்கள்தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக (சங்கீதம் 90:17) என்று உள்ளம் உருகி ஜெபித்தார். ஆகவே அநேகர் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டால் கர்த்தர் உடனே, தாங்கள் மேல் பிரியமாய் இருப்பார் என்று எண்ணுகிறார்கள். அது தவறு நாம் அவரை பிரியபடுத்த தீர்மானிக்கும்போதுதான் அவரது பிரியம் நம் மேல் இருக்கும்.**

**பிரியமானவர்களே அப்படி நம் மேல் கர்த்தர் பிரியமாய் இருக்க நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டியவை எவை என்று பார்த்தால்**

**1. <u>சத்தியத்தில் நடப்பது</u> : என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று நான் கேள்விபடுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை (3 யோவான் 1:4) நாம் சத்தியவேதத்தை இரவும் பகலும் தியானம்**

செய்து ஆலோசனைகளுக்கும், கட்டளைகளைகளுக்கும், கீழ்படிந்து நடந்தால், (சங்: 1:2). கர்த்தர் நம்மை பார்த்து மகிழ்ச்சி அடைவார், நம்மேல் பிரியமாய் இருப்பார்.

இயேசு கிறிஸ்துவே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார். அவர் காட்டும் வழிதான் சத்தியவழி அந்த சத்தியத்தில் நடந்து கர்த்தரை பிரியபடுத்துவோம். சுத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்(யோவான் 8:32) சத்தியம் எனும் கச்சையை அறையில் கட்டிக் கொள்ளுங்கள்.

2. <u>கர்த்தருக்கு கீழ்படிவது:</u> சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? (1 சாமு 15:22) தாவீதும் கூட அதை குறித்தே சொல்லுகிறார். பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன் தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான் தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.(சங் 51:16-17)பலியிடுவதை பார்க்கிலும் நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்கு பிரியம்.(நீதி 21:3)

கர்த்தர் சவுலை அழைத்து அமலேக்கியரை சர்வசங்காரம் பண்ண வேண்டும் என்று கட்டளையிடிருந்தார். ஆனால் சவுலோ ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும் நலமான எல்லாவற்றையும் அழித்து போட மனமில்லாமல் தப்பவைத்தார். சவுலின் கீழ்படியாமையினால் கர்த்தர் ராஜாவாயிராதபடி புறக்கணித்து தள்ளினார். யோனா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ் படிந்து நினிவேயிற்குப் போகாமல் தர்ஷீசுக்கு கப்பல் ஏறினபடியால் அநேக பாடுகளை அனுபவித்தார்.

இயேசு எப்பொழுதும் பிதாவக்கு பிரியமானதை செய்து மரண பரியந்தம் கீழ்படிந்தவராக தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலி 2:8) ஆகவே மூன்று சந்தர்ப்பங்களில் பிதாவாகிய தேவன் இயேசுவை குறித்து சாட்சி கொடுத்து ‘இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன்’ என்று சொன்னார். முதலாவது இயேசு ஞானஸ்தான சத்தியத்திற்கு கீழ்படிந்தார். இயேசு ஞானஸ்தானம் பெற்றவுடனே. பிதாவினுடைய அன்பும். பாசமும், பிரியமும். இயேசுவின் மேல் வைத்து வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி அவர் என்னுடைய நேச குமாரன் அவரில் பிரியமாய் இருக்கிறேன் என்று உரைத்தது.(மத் 3:17) பிதாவுக்கு கீழ்படிந்த போது மனுஷகுமாரனாய் இருந்தவர் நேசகுமாரனாய் மாறிவிட்டார். இரண்டாவது இயேசுவின் பாடு மரணங்களை குறித்து இயேசுவோடு கூட மோசேயும், எலியாவும், மறுரூபமலையிலே, பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு கீழ்படிந்து மரணத்திற்கென்று ஒப்புகொடுத்த உடனே ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது அவர் என்னுடைய நேச குமாரன் அவரில் பிரியமாய் இருக்கிறேன். அவருக்கு செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று(மத் 17:5)

( வரும் இதழிலும் தொடரும்)

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

Joan Ashokumar

# கடந்த மாத நிகழ்வுகள்

## சபை போதகர். திரு அருள் சாமுவேல் அவர்களுக்கு சபையில் பிரிவு உபச்சார விழா நடத்தப்பட்டது அதின் ஒரு சில பகுதிகள்





அனைத்து சபை போதக பிதா அவர்களது துணைவியாருடன் வந்து நமது
சபை போதகரின் பிரிவு உபச்சார விழாவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்









போதகர் திரு அருள் சாமுவேல் அவர்களும்
அவரது துணைவியார் சகோதரி பிரிசில்லா சாமுவேல் அவர்களும் சபைக்கு நன்றி கூறி
பிரியா விடைபெறும் காட்சி



உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்


செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷூயா டேவிட்ஸன்

23922536 - 97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org


தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது


Private circulation